சுத்தத்திற்கும், சுவைக்கும்
புகழ்பெற்ற
சைவ ஹோட்டல்
**தேவி விலாஸ்**
சுத்தம், சுவை,
அன்பான உபசரிப்பு!
சைவ போசனகாரர்
மனதில் என்றும்
**தேவி விலாஸ்**
(வண்ணை சிவன்கோவில்
சந்தி)
238 காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் 8 ★

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 21 தை 11 ரபி-அல் 6 இதழ் 347
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 25-1-80

புதிய வகுப்புகள்
G. C. E. A/L O/L
1980 / 81 ஆகஸ்ட், டிசம்பர்
ஆரம்பம் 1-2-80
லோகநாதன்
இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

RECEIVED
1980 - 1 - 25
PERIODICALS DIVISION
LIBRARY ★ CAMPUS

## இறைச்சிக் கடைகள்

# "டெண்டர்" முறையில் மாற்றமில்லை!

## அமிர், யோகேஸ் கோரிக்கை நிராகரிப்பு

(கொழும்பு)

**இறைச்சிக் கடைகளை கேள்விப் பத்திரம் மூலமாக கொடுப்பதை பின்போடும்படி எடுக்கப்பட்ட கோரிக்கையை அரசு நிராகரித்து விட்டது.**

நேற்று இது தொடர்பாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரும், யாழ்ப்பாணம் எம். பி. யும் கோரிக்கை விடுத்தனர்.

இப்போது நடைமுறையிலுள்ளமுறையைமாற்றிகேள்விப் பத்திரமூலம் வியாபாரிகளுக்கு இறைச்சிக்கடைகளை கொடுக்கும் முறை நாடு முழுவதும் அமுல்நடத்தப்படுகின்றது. யாழ்ப்பாணத்துக்கு மாத்திரம் தனியாக ஒரு நடைமுறையைச் செயற்படுத்த முடியாது என்று ஆதரவில் பதிலளித்த உள்ளூராட்சி பிரதிஅமைச்சர் திரு. இம்புலானா கூறினார்.

ஒத்திவைப்புப் பிரேரணையின்போது இப்பிரச்னை கிளப்பப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் பலவருட காலமாகவே சில குடும்பங்கள் இந்தக் கடைகளை நம்பி வாழ்கின்றனர். திடீரென இம்முறை மாற்றப்படுமானால் அந்த மக்கள் பாதிக்கப்படுவார்கள் டெண்டர்மூலம் பெரும் பணக்காரர்களே இக்கடைகளை எடுத்து நடத்தக்கூடியதாக விருக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் கூறினார்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. யோகேஸ்வரன் பேசியபோது இத்திட்டத்தை ஒரு வருடத்துக்காவது ஒத்திப்போடும்படி கேட்டுக்கொண்டார்.

முஸ்லிம்கள் தங்கள் மதத்தைச் சாராதவர்களால் விற்கப்படும் இறைச்சியை உண்ணமாட்டார்கள். டெண்டர் முறையினால் முஸ்லிம்கள் அல்லாதவர்களும் கடைகளை எடுத்து நடத்தநேரும். இது முஸ்லிம்களைப் பாதிக்கும் என்று கூறிய திரு. யோகேஸ்வரன் இத்திட்டத்தை ஒரு வருட காலத்திற்காவது ஒத்திபோடும்படி கேட்டுக்கொண்டார்.

பிரதமர்சார்பில் பதிலளித்த பிரதி அமைச்சர் திரு. இம்புலானா யாழ்ப்பாணத்துக்கு மாத்திரம் இத்திட்டத்தை மாற்றி அமைப்பது சாத்தியமில்லை. முஸ்லிம் மக்கள் விரும்பினால் கடைகளை அவர்களும் டெண்டர் மூலம் பெற்றுக் கொள்ளமுடியும் என்றார். [ம]

## யாழ். மாநகரசபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக் கூட்டம் இன்று பிற்பகல் யாழ். மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் தலைமையில் நடைபெறும். (கொ)

## நூல்நிலைய அபிவிருத்தி: மேயர்தலைமையில்ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுசன நூல்நிலைய அபிவிருத்தி சம்பந்தமான ஆலோசனைக் கூட்டமொன்று யாழ் மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு யாழ் மாநகர ஆணையாளர் திரு. கே. சிவஞானம் உதவிமேயர் திரு. எவ். எக்ஸ். சேவியர் நூல் நிலைய ஊழியர்கள் அதிகாரிகள் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலின் போது நூல்நிலையக்கட்டிடம், தளபாடங்கள். புதிய புத்தகங்களை வாங்குதல். திருத்த வேலைகள் போன்ற விஷயங்கள் குறித்து ஆலோசனைகள் நடத்தப்பட்டது.

நூல்நிலையம் சம்பந்தமான ஆலோசனைகள் வழங்குவதற்கென ஒரு குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

திருவாளர்கள்கே. நேசையா, எஸ். அம்பிகை பாகன், எஸ். சபாரத்தினம், வண. பிதா பிரான்சிஸ் அடிகள், எஸ். மயில்வாகனம், ஏ. குலேந்திரன், சி. முருகரத்தினம், ஜனப். கே. சாஹுல் ஹமீட் ஆகியோர் மேற்படி குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக்குழு யாழ் மாநகரமுதல்வரின் கீழ் இயங்கும். (கொ)

## புலமைப் பரிசில் பெறும் மாணவி



(யாழ்ப்பாணம்)

ஹிஜ்ரி 1,400வது ஆண்டுத் தேசிய விழாவினை முன்

(8-ம் பக்கம்பார்க்க)

## மாதகல்-யாழ், ஓடும் பஸ்ஸில் இளம் பெண் பிரசவம்

(யாழ்ப்பாணம்)

மாதகல்-யாழ்ப்பாணம் பஸ்ஸில் நேற்றுக்காலை இளம் பெண் ஒருவர் குழந்தையொன்றைப் பிரசவித்தார். பஸ்ஸிலிருந்த பெண்பிரயாணிகள் அப்பெண்ணுக்குத் தேவையான உதவிகளைச் செய்தனர்.

பண்டத்தரிப்பில் இந்த பஸ்ஸில் வயோதிபத் தாயும், கர்ப்பிணியான திருமதி சுப்பிரமணியம் என்ற பெண்ணும் ஏறிக்கொண்டனர். இளம் பெண்ணுக்குத் திடீரெனப் பிரசவ வேதனை ஏற்பட்டு, சண்டிலிப்பாயில் குழந்தை ஒன்றைப் பிரசவித்தார்.

பஸ் நேராக மானிப்பாய் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு குழந்தையும், தாயும் அனுமதிக்கப்பட்டனர். (க)

## லொறி - சைக்கிள் விபத்தில் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

பிறவுண்வீதி அரசடிச்சந்தியில் நேற்று ஏற்பட்ட லொறி-சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்றவர் மரணமானார்.

லொறிச்சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். யாழ் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மய. . கு. துணை

**திருமண அழைப்பு**

நிகழும் 1980-ம் ஆண்டு தைமாதம் 28-ம் திகதி [28-1-80] திங்கட்கிழமை காலை 7-30 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில்

எமது சிரேஷ்ட புத்திரி
**எலிசபெத் ஞானேஸ்வரி**
அவர்களுக்கும்

சுன்னாகம் யோ. வின்சன்ற் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் திருநிறை செல்வன்
**வில்லியம் மரியதாஸ்**
(வீடமைப்புத் திணைக்களம், யாழ்ப்பாணம்)
அவர்களுக்கும்

மெய்விவாகத் திருச்சடங்கு நிறைவேற்ற நிச்சயித்திருப்பதால்அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறும், 31-1-80 வியாழன் மாலை 3 மணி தொடக்கம் 8 மணிவரை எமது இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்தில் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் வேண்டுகின்றோம்.

தனிப்பட்ட அழைப்புகள் கிடைக்காத அன்பர்கள் இவ்வழைப்பை அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்
தங்கள் அன்புள்ள
"மரிய வாசம்" வைத்தியகலாநிதி ஜி. ஜோர்ஜ்ஜம்
சுன்னாகம் (சமாதான நீதவான்)
4774 மனைவி ஞானமலரும்

# தமிழ்நாட்டில் மதுவிலக்கு தளர்த்தப்படுகிறது!

## கருணாநிதிமீதான வழக்கு வாபஸ்?

(சென்னை)

தமிழ்நாட்டில் மதுவிலக்கு சட்ட விதிகள் தளர்த்தப்படவிருக்கின்றன. இதற்கான திருத்தச் சட்டம்ஒன்று விரைவில் கொண்டு வரப்படும்.

அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மீது தாக்கல்செய்யப்பட்டு செப்டர் மாதம் வரை பைசல் ஆகாமலிருக்கும் வழக்குகள் யாவும் வாபஸ் பெறப்படும்.

இதன்படி தி. மு. கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதி மீதான வழக்குகள் திரும்பப் பெறப்படும் என்று கருதப்படுகின்றது.

மதுவிலக்குச்சட்டம் தளர்த்தப்படுவது பற்றி நேற்று தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் பத்திரிகைநிருபர்களிடம் தெரிவித்தார்.

மதுபானப் பெர்மிட் பெறுவதற்கான வயது 40 ஆக இருப்பது இனி 30 ஆகக் குறைக்கப்படும். இதைப் பெறுவதற்கு மருத்துவச் சான்றிதழ் தேவையில்லை. கட்டணம் 100 ரூபாயிலிருந்து 25 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளதென்று முதலமைச்சர் திரு. இராமச்சந்திரன் அறிவித்தார்.

தனியார் கட்டிடங்களுக்கு அல்லது ஓட்டல் அறைகளுக்குள் மது அருந்துவது குற்றமாகக் கருதப்படமாட்டாது. பொது இடங்களில் தடை தொடர்ந்து இருந்துவரும்.

இவை யாவும் உள்ளடக்கப்பட்ட திருத்தச் சட்டம் விரைவில் கொண்டுவரப்படும் மதுவிலக்கைத் தளர்த்துவதால் இதில் அரசு பின்வாங்குவதாகக் கருதத்தல்ல. இச்சட்டத்தினால் ஏழைமக்கள் பாதிக்கப்படுவதை அரசு விரும்பவில்லை. கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவதற்கு எதிரான சட்டம் கடுமையாக அமுல்நடத்தப்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

உடுவில், கலை கலாசார பல்கலைக்கழகத்திற்கும், பெண்கள் கல்லூரிக்கும் அருகாமையில், உடுவில், மானிப்பாய் வீதியில் கிணற்றுடன் கூடிய 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு:- 137, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 4782

28-1-80-ம் திகதி நடைபெற விருக்கும் தம்பலகாமம் ஸ்ரீ ஆதிகோணநாயக சுவாமி தேவஸ்தான கும்பாபிஷேகத்தின்போது அங்கு மில்க்வைற் ஸ்தாபனத்தாரின் மலிவு விற்பனை நடைபெறும். அத்துடன் சிவன், பார்வதி படங்களும் அன்பளிப்பாக வழங்கப்படும். மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளைச் சேகரித்து வைத்திருப்பவர்கள் ஒப்படைத்து சிறந்த பரிசுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற், த. பெ. இல:77, யாழ்ப்பாணம். 4732

EL தொடர்பிலக்க வொக்ஸ்வாகன் (Volkswagon) 38-42 M. P. G. நல்லநிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: விற்பனை முகாமையாளர், த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட், 191, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 76ε0. (4746)

புலோலி
ப. நோ. கூ. சங்கம்

## வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திரம்

புலோலி ப. நோ. கூ. சங்கத்தில் கீழ்வரும் வகையான வெற்றுச் சாக்குகள் விற்பனைக்காக கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. கொள்வனவு செய்ய விரும்புவோர் தலைவர், புலோலி ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 10-2-1980-ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திரம்" எனக்குறிப்பிடல் வேண்டும். கேள்விப் பத்திரத்துடன் மீளளிக்கும் வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்துதல் வேண்டும். வைப்புப் பணம் இடாதோரின் கேள்விப் பத்திரம் எதுவித காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இதற்கான வைப்புப் பணத்தையும் விண்ணப்பப் படிவத்திற்காக ரூபா 2/-ம் செலுத்தி இதற்குரிய படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான பணத்தை நேரடியாகவோ அன்றேல் தபால் காசுக்கட்டளை மூலமாகவோ அனுப்பிவைத்தால் இதற்கான விண்ணப்பப்படிவம் உரியவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

### விபரம்

| | | |
|---|---|---|
| (1) | அரிசி இல. I | 220 |
| (2) | அரிசி இல. II | 240 |
| (3) | அரிசி அலசல் | 285 |
| (4) | சீனி | 302 |
| (5) | மா அலசல் | 1216 |
| (6) | S. M. C. | 40 |
| (7) | அரிசி 1 அந். | 405 |
| (8) | நவதானியம் | 82 |
| (9) | சக்கரை | 29 |
| (10) | உப்பு | 40 |
| (11) | கழிவு | 276 |
| (12) | மா 140 ரூத். | 7[illegible] |
| (13) | மா சிங்கப்பூ | 45 |
| | | 000 |

பொதுமுகாமையாளர்.
4781

## 11-வது ஆண்டு நினைவாஞ்சலி



வட்டுக்கோட்டை
உயர்திரு முதலியார்
ப. மு. சங்கரப்பிள்ளை
[சமாதான நீதவான்]
தோற்றம்: 6-11-1906
மறைவு: 25-1-1968

அன்பின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய் பலரது துயரத்தையும் தாங்கி, எல்லோரையும் அரவணைத்து வாழ்ந்துகாட்டினீர். தங்கள் நினைவு என்றும் எம் இதயத்தை விட்டகலாது.

மனைவி, மக்கள்,
4785 மருமக்கள்.

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

வரணி இயற்றாலை காலஞ்சென்ற தில்லைநாதர் கைம்பெண் சின்னப்பிள்ளை என்பவரின் மரண சாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்
மரணமெய்தியவர்

1. வீரகத்தி முருகப்பிள்ளையும் பெண்
2. பாறுப்பிள்ளை முருகுப்பிள்ளை - இருவரும்,
நாவற்குழி, வரணி.
மனுதாரர்கள்.

எதிராக

இல: 192/T.

1. கணபதிப்பிள்ளை இராமநாதனும் பெண்
2. செல்லம்மா இராமநாதன் - இருவரும்.
நாவற்குழி, வரணி.
- எதிர்மனுதாரர்கள்.

மேற்படி வழக்கு மேற்குறிப்பிட்ட இறந்தவரின் மரணச் சொத்து நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ளஎவரும் 1980-ம் ஆண்டு மாசி மாதம் 21-ந் திகதி நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னில்தோன்றிஅப்பின்னுறுதிக்கட்டளைஏன்முற்றுனதாகப் படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1979-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 6-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
V. சிவசுப்பிரமணியம்,
ஒப்பம்
[illegible]

தயாரிப்பவர்:
சு. கந்தசாமி,
மனுதாரின் சட்டத்தரணி.
?267

## ஏல விற்பனை

பழுதடைந்த வெற்று றம்கள் (கொள்கலன் 5) [illegible]0-01-80 புதன்கிழமை காலை 10-00 மணிக்கு வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். தேவையானோர் ஏலத்தில் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்,
வேலணை
ப. நோ. கூ. சங்கம்,
வேலணை.
23-1-80
[illegible]77

உடுப்பிட்டி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## தற்காலிக கணக்காளர் பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்திற்கு ஓர் தற்காலிககணக்காளர்தேவை. பின்வரும் தகைமைகளை உடையோர் எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 7-2-80ந் திகதிக்கு முன் மேற்படி விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

தகமை:

1. ஒருவருடகால அனுபவத்துடன் சிரேஷ்ட தொழில் நுட்பக்கல்லூரியில் கணக்கியலில் பெற்ற டிப்ளோமா, அல்லது
2. கூட்டுறவு வேலையாளர் உயர்தர தராதரப் பத்திரத்துடன் அத்தகைய ஓர் நிறுவனத்தில் பெற்றுள்ள இரண்டு வருடகால அனுபவம்.
3. முன்னைநாட் கூட்டுறவுப் பரிசோதகர் (75-ம் ஆண்டுக்குப் பின் இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

வயதெல்லை:
25-60வரை இருத்தல் வேண்டும்.

சம்பளம்:
சகல படிகளும் உட்பட நாளாந்தம் ரூபா 25/-.

பொதுமுகாமையாளர்,
உடுப்பிட்டி
ப. நோ. கூ. சங்கம்.
4771

வ. முத்துக்குமாரசுவாமி,
சட்டத்தரணி,
29, முன்தெரு,
யாழ்ப்பாணம்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற கோப்பாய் தெற்கு தருமலிங்கம் கைம்பெண் நாகேஸ்வரி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,
மரணமெய்தியவர்
சுப்பிரமணியம் தருமலிங்கம் இங்குறுகம தோட்டம், பதுளை.
மனுதாரர்

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல. 3145

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1980ஆம் ஆண்டு மாசி மாதம் 1-ஆந் நாளன்று முற்பகல் 10 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்.
பதிவாளர்,
[illegible]
1979ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 29ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
4770

## அமரர் ப. மு. சங்கரப்பிள்ளை



வட்டுக்கோட்டையைச் சேர்ந்த முதலியார் ப. மு. சங்கரப்பிள்ளை மறைந்து இன்று பதினொரு ஆண்டுகளாகின்றன, அவனுர் வட்டுக்கோட்டை மக்களுக்கு ஆற்றிய சேவையின் மூலம் அவர் மறைந்தாலும் வட்டுக்கோட்டை மக்களின் மனதில் அவர் என்றும் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளார்.

அமரர் முதலியார் ப. மு. சங்கரப்பிள்ளை மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் தலைவராக தொடர்ந்து 18 ஆண்டுகள் கடமையாற்றி அவ் வைத்தியசாலையை ஆசியாவிலேயே சிறந்ததென்று பெயர் பெறுமளவிற்கு அதன் மதிப்பை உயர்த்தினார். அன்னார் வடபாகாண மில்லரிசையாளர் சங்கத்தை ஸ்தா

(4-ம் பக்கம் பார்க்க)

## பஸ் சாரதிகள் தேவை

பிரபல வர்த்தக ஸ்தாபனமொன்றிற்கு பஸ் ஓட்டுவதற்கு ஆகக்குறைந்தது ஏழு வருட அனுபவமுள்ள பஸ் சாரதிகள் தேவை. விண்ணப்பதாரர்கள் நல்லதேகஆரோக்கியம் உள்ளவர்களாயிருத்தல் வேண்டும். ஆகக்குறைந்தது கனிஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாயிருத்தல் வேண்டும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். 45 வயதுக்கு உட்பட்டவர்களாயிருத்தல்வேண்டும். ஒருகிழமைக்குள் சான்றுப்பத்திரங்களுனும், அண்மையில் பெற்ற நற்சாட்சிப்பத்திரங்களுடனும் விண்ணப்பிக்கவும்.

த. பெ. எண்: 932,
4766 கொழும்பு.


## Alliance Francaise

(International School of French Language & Cultural)
Classes in FRENCH for beginners will commence soon.
French feature films are lent to Organisations free of charge.
16 mm projector available on nominal rent.

Further details:
ALLIANCE FRANCAISE,
130, 1st Cross Street,
Jaffna.
Tele: 7782

(4743)


உ
சிவமயம்

## திருமண அழைப்பு

நிகழும் சித்தார்த்தி ஆண்டு தைத் திங்கள் 14-ம் நாள் (28-1-80) திங்கட்கிழமை பகல் 12-24 மணி முதல் 1-12 மணி வரையுமுள்ள இடப லக்கினமும் மிருகசீரிட நட்சத்திரமும் அமிர்தசித்தயோகமும் கூடிய நல்லோரையில்,

| எமது புத்திரன் திருநிறை செல்வன் **சிறிஸ்கந்தன்** அவர்களுக்கும் (பங்காளர் செல்லப்பா அன் கொம்பனி) | எமது புத்திரி திருநிறை செல்வி **திலகவதி** அவர்களுக்கும் |
|---|---|

திருமணம் மணமகள் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றம் சூழச் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மணமகன் இல்லத்தில் (29-1-80) செவ்வாய்க்கிழமை மாலை 5-30 மணிமுதல் 8-30 மணிவரை வரவேற்புபசாரம் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்

| இ. செல்லப்பாவும் பாரியாரும், 239/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 18-1-80. | சி. இளையதம்பியும் பாரியாரும், சேகரம் வீதி, தையிட்டி, காங்கேசன்துறை. |
|---|---|

4783

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

நிகழும் சித்தார்த்தி ஆண்டு தை 13-ம் நாள் (27-1-1980) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 11 மணிவரையுள்ள சுபவேளையில்

| மணமகன் **ஜெகநாதன்** (மின்முகாரியா. ம. ச.) | மணமகள் **சரோஜினிதேவி** |
|---|---|

ஆகியோருக்கு
மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமணத்திற்கு அன்புடன் அழைக்கின்றோம்.

மணமகன் இல்லத்தில் அன்று மாலை 5 மணிக்கு வரவேற்புபசாரம் இடம்பெறும்.

| கோ. தியாகராசா பாரியார், இல.9 புதிய வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். | தா. சங்கரப்பிள்ளை பாரியார், பிரம்படி லேன், கொக்குவில். |
|---|---|

4777

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மொத்தத்தேசிய உற்பத்தியின் உள்ளடக்கமும் அதன் போக்குகளும்

### மணிவாக்கு

பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களிலும் சரி, அரசின் நிர்வாகத்திலும் சரி, மக்கள் பெரும்பாலான அளவில், பரவலாக ஈடுபடும் அமைப்புமுறையை உருவாக்க வேண்டும்.

-ஜெயப்பிரகாசர்

## ஏன் உற்பத்தி?

ஒரு குறிப்பிட்ட வருடத்தில் இலங்கைக்குக் கிடைக்கும் உற்பத்திப்பொருட்கள், சேவைகளின் மொத்தமே இலங்கையின் தேசிய வருமானம் ஆகும் மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காகவே நாட்டில்உற்பத்தி நடைபெறுகிறது. உற்பத்தி செய்வோர் உற்பத்தியாளர் எனவும் உற்பத்திக்குப் பயன்படுத்தும் காரணிகள் உற்பத்திக் காரணிகள் எனவும் அழைக்கப்படும்.

பண்டைக்காலத்தில் இலங்கை மக்கள் தமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பொருட்கள், சேவைகளையே உற்பத்தி செய்தனர். அக்காலத்தில்ஏற்றுமதி. இறக்குமதித் தொடர்புகள் இல்லை. மக்களின் தேவைகளும் மிகக் குறைந்த மட்டமே. எனவே மொத்தத் தேசிய உற்பத்தி மிகக் குறைந்த அளவாகவே இருந்தது.

## உற்பத்தி விரிவாக்கம்

இலங்கையில் குடியேற்ற ஆட்சி உருவாகிய பின்பே உற்பத்தி விரிவாக்கப்பட்டது. குறிப்பாக பிரித்தானியர் ஆட்சியின்போதே உற்பத்தித் துறைகள் விஸ்தரிக்கப்பட்டன. ஏற்மதிப்பொருளாதாரம், நாகரீக ஊடுருவலால்ஏற்பட்ட தேவைகள், நவீன உற்பத்திமுறைகள், தொழிலாளர் இறக்குமதி முயற்சியாளரின் ஆர்வம் போன்றவையே இவ் விஸ்தரிப்புகட்குக் காரணங்களாகும். இலங்கையின் வருமானங்களைச் சுரண்டுவ

**ஏ. எஸ். சரவணபவான் பி. ஏ. (இல.)**
(ஆசிரியர், மகாஜனக் கல்லூரி)

தற்காக வந்த பிரித்தானியருக்கு; இலங்கையின் உற்பத்தித்துறைகளை விஸ்தரிப்பது அவசியமாகியது. இதனல் அந்நிய முதலீடு, அந்நிய மூலப் பொருட்கள், இறக்குமதி செய்யப்பட்ட தொழிலாளர் (இந்தியர்); வெளிநாட்டுத் தொழில் நுட்பங்கள் போன்றவற்றுன் அந்நிய முயற்சியாளர்களால் வழிநடத்தப்பட்டு வெளி நாட்டவரின் தேவைகட்காக இலங்கையின் மலைநாட்டுப் பிரதேசத்தில் உற்பத்தியாக்கப்பட்ட பொருட்களே தேயிலை, இறப்பர் போன்ற பொருந்தோட்டத் துறையின் விளைபொருட்கள் ஆகும். மறுபுறம் உள்நாட்டு முதலீடு, உள்நாட்டுத் தொழிலாளர், பழமை வாய்ந்த தொழில் நுட்பங்கள் போன்றவற்றுடன் உள்நாட்டவரால் அவர்களின் அன்றாட தேவைகளுக்காக விளைவிக்கப்படும் பண்டங்களே நெல், தானியங்கள் போன்ற உள்நாட்டு விவசாயத்துறையின் விளைபொருட்களாகும். இவற்றிலிருந்து இலங்கையின் விவசாயத்துறை என்பன அங்கம் வகிப்பது புலனுகிறது.

அண்மைய ஆண்டுகளாக இலங்கையின் தேசியஉற்பத்தியில் கைத் தொழில்துறை முக்கியபங்கை வகிக்கிறது. சிறுகைத்தொழில், பாரிய கைத்தொழில் போன்றன வளர்ந்து வருகின்றன. இதன் வளர்ச்சி வீதம் 1976ல் 1.2வீதமாகவும் 1978ல் 10. 6 வீதமாகவும் உள்ளது. இதில் உணவு, குடிசனம், ஆடைகள், புடவை தோல்உற்பத்திகள், தளபாடங்கள், இரசாயனப் பொருட்கள்போன்றன அங்கம் வகிக்கின்றன.

மேலும் இலங்கையின் உற்பத்தியில் சேவைத்துறை என்பதும் முக்கியத்துவம் வகிக்கிறது, கல்வி, சுகாதாரம், மருத்துவம் போன்ற சேவைகள் நாட்டில் உற்பத்தியாகின்றன. சுருங்கக்கூறின் இலங்கையின் உற்பத்தித் துறையில் பின்வரும் மூன்று துறைகள் முக்கியபங்கெடுக்கின்றன.

(அ) விவசாயத்துறை (ஆ) கைத்தொழிற்துறை, (இ) சேவைத்துறை.

## தேசிய உற்பத்தியில் அடங்குபவை

இலங்கைக்குப் பல்வேறு உற்பத்தித்துறைகளினூலும் கிடைக்கும் மொத்த உற்பத்திகளினதும் பணரீதியான பெறுமதியே இலங்கையின் தேசிய உற்பத்தி ஆகும். இதில் (1) வேளாண்மை, காட்டுத்தொழில், வேட்டையாடல், கடற்றொழில்; (2) சுரங்கத் தொழிலும் பார் குழித் தொழிலும், (3) தயாரிப்புத் தொழில், (4) கட்டடவாக்கம், (5 மின்வலு, வளி, நீர், (6) போர்க்குவரத்து, களஞ்சியப்படுத்தல், (7) மொத்த. சில்லறை வர்த்தகம், (8) வங்கித் தொழில், காப்புறுதி, (9) குடியிருப்புக்களின் உடைமை, (10) பொதுநிர்வாகமும் பாதுகாப்பும்: (11) ஏனைய பணிகள் என்ற 11 துறைகளினதும் பெறுமதிகள் கூட்டப்பட்டு இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி பெறப்படுகிறது. இத்துடன் வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணிவருமானப் என்பது கூட்டப்பட்டுப்பெறம் படுவதே இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தி ஆகும்.

## உற்பத்திப் போக்குகள்

1959-ம் ஆண்டு மொத்த தேசிய உற்பத்தி 58,930 லட்சம் ரூபா ஆகும். 1978-ல் இது 11,9430 லட்சம் ரூபா ஆகும். மொத்தத் தேசிய உற்பத்தி அதிகரித்துள்ள போதிலும், அதில் 39% ஆக இருந்த விவசாய உற்பத்தி 31% ஆக வீழ்ச்சியடைந்ததும்; 13% ஆக இருந்த கைத்தொழில் உற்பத்தி 16% ஆக அதிகரித்தமையும் நோக்கற்பாலது.

## அண்மைக் காலங்களில்

| ஆண்டு | உண்மையான தே. வரு. (லட். ரூபா) | சனத்தொகை (லட்சம்) | தலாவரு. (ரூபா) |
|---|---|---|---|
| 1975 | 97980 | 135 | 826 |
| 1976 | 101990 | 137 | 838 |
| 1977 | 111270 | 140 | 855 |
| 1978 | 119430 | 142 | 917 |

1977-ல் நிலையான விலையிற் மொத்தத் தேசிய உற்பத்தி 44% அதிகரிப்பைப் பெற்றது. இவ் அதிகரிப்புக்கு வேளாண்மை, வர்த்தகம், போக்குவரத்து என்பவற்றிற் காணப்பட்ட உயர்மட்ட வெளியீடே காரணமாகும். இங்கு வேளாண்மைத்துறை முதன்மை வகிக்கிறது. மொத்த உற்பத்தியில் இவ்வுற்பத்தி 30% ஆகும். 1977-இன் சனத்தொகை 139.7 லட்சம். இது 1976 ஐ விட 1.7% அதிகரிப்பு ஆகும். நடைமுறை விலையில் தலா வருமானம் 2084 ரூபா. நிலையான விலையில் 855 ரூபா ஆகும். இது 1976 ஐ விட 2.6% அதிகரிப்பு ஆகும். தலா வருமான அதிகரிப்புக்குக் காரணம் சனத்தொகை அதிகரிப்பு வீதத்திலும் உற்பத்தி அதிகரிப்பு வீதம் கூடியமையே.

1978 ல் நிலையான விலையில் மொத்தத் தேசிய உற்பத்தி 8.2% அதிகரிப்பைப் பெற்றது. 1968 ல் அடைந்த உயர்மட்ட அதிகரிப்பை மீண்டும் இவ்வாண்டிலேயே இலங்கை பெற்றுள்ளது என மத்திய வங்கி அறிக்கை கூறுகிறது. இவ்வாண்டிலும் வேளாண்மைத்துறை 31 % ஆக இருந்து முதன்மை பெறுகிறது.

உற்பத்தி அதிகரித்தமைக்கு சுரங்கத் தொழில், மின்வலு, தயாரிப்பு, வர்த்தகம், கட்டடவாக்கம் என்பவை தேக்க நிலையிலிருந்து விடுபட்டமையும், வேளாண்மைத்துறையில் இறப்பர் உற்பத்தி அதிகரிப்பு, நெல் உற்பத்தி அதிகரிப்பு என்பவையும், வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்பட்ட உயர்ச்சியுமே காரணங்கள் ஆகும். மேலும் தேயிலை உற்பத்தி, உப உணவு உற்பத்தி என்பவை வீழ்ச்சியடைந்ததும் இங்கு குறிப்பிடக்கூடியது. உப உணவு உற்பத்தி வீழ்ச்சிக்கு இலங்கையின் இறக்குமதியே காரணமாகும்.

(ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி அறிக்கை)

## மக்கள் கருத்து

### மல்லாவியில் பொதுச் சந்தை

கிராமங்கள் நகரமாவதற்குத் துணைபுரிவது சந்தைகளே. சந்தையொன்றுண்டானல் அப்பகுதியிலே வாழும் மக்கள் தமது விவசாய உற்பத்திப் பொருட்களையும், கைத்தொழிற் பொருட்களையும், கால்நடைப் பிரயோசனங்களையும் அங்கே கொண்டு சென்று விற்பனை செய்வர். விற்பனை வசதியிருந்தால் உற்பத்தி செய்யும் ஆர்வமும் மக்களிடையில் அதிகரிக்கும். உள்ளூரிலே தட்டுப்பாடான பொருட்களை வெளியூர் வியாபாரிகள் கொண்டுவந்து விற்பனை செய்வர். இவற்றுல் பண்டங்களுக்கேற்படும் தட்டுப்பாடோ பணக் கஷ்டமோ மக்களுக்கு ஏற்படாது பண்டங்களின் விலையும் அதிகமுயராதிருக்கும். அதனல் உற்பத்தியாளரல்லாத மக்களுக்கும் வாழ்க்கைச் செலவு குறையும். இவ்வளவு நன்மைகளும் சந்தைகளினுலே ஏற்படுகின்றன.

ஆனல் இவ்வசதி துணுக்காய், வவனிக்குளப்பகுதி மக்களுக்கு இவ்வளவு காலமும் கிடைக்கவில்லை. இவர்கள் இற்றைவரை 28 மைல்களுக்கப்பாலுள்ள கிளிநொச்சிச் சந்தையையே தமது சந்தையாக உபயோகித்தனர். அது இவர்களுக்குப் பெரும் கஷ்டமாக இருந்தது. இக்குறையைத் தீர்க்கும்விதத்தில் மல்லாவியில் இம்மாதம் 28 ம் திகதி பொதுச் சந்தை ஒன்று திறக்கப்படவுள்ளது. இச்சந்தை ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமைகளில் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் இப்போது செய்யப்பட்டுள்ளன. ஆரம்பமாகும் இச்சந்தையின் வளர்ச்சி வியாபாரிகளதும், பொதுமக்களதும் கையிலேயே தங்கியுள்ளது. அதை இருபகுதியாரும் கவனிக்கவேண்டும். இலங்கைப் போக்குவரத்துச் சபையினரும் இந்நாட்களிலே விசேட பேருந்துச் சேவைகளை நடத்தவேண்டும்.

வெளியூர்களிலும் உள்ளூரிலுமிருந்து வரவிருக்கின்ற வணிகப் பெருமக்கள் சந்தை நாட்களில் வந்து தங்கள் தொழிலை வளர்த்துச் சந்தையையும் வளர்க்கவேண்டும். உள்ளூரவர்க்குத் தேவையான நுகர்ச்சிப் பொருட்களைக் கொண்டுவந்து விற்பனை செய்வதும் உள்ளூரிலே காலத்துக்குக்காலம் உண்டாகும் உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்வதும் சந்தையின் வளர்ச்சிக்கு உதவுவதாகும்.

பொதுமக்கள் தங்கள் உற்பத்திகளைப் பயமின்றிப் பெருக்க முயலவேண்டும். உற்பத்திப் பொருட்களை வெளியூர்ச் சந்தைகளுக்குக் கொண்டு சென்று அலையாமல் மல்லாவிச் சந்தைக்குக் கொண்டு செல்லவேண்டும். தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய நுகர்ச்சிப் பொருட்களைச் சந்தைநாளிலே பொது மக்கள் சென்று மலிவு விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். கிளிநொச்சியிலும், சாவகசசேரியிலும், சுன்னகத்திலும், கொடிகாமத்திலும் உள்ள சந்தைகள் போன்று மல்லாவிச் சந்தையும் வளர்ந்து வளம்பெறவேண்டும்.

**செ. மயில்வாகனம்**
தலைவர்,
ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கி. மு. ச.
மல்லாவி.

## "வறியகுடும்பங்களுக்கு பேருதவி"

[ஊரெழு]

வாழ்க்கைசெலவுகள் விஷம் போல ஏறிவரும் இந்தக் காலத்தில் அரசாங்கத்தால் இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுவது பல வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு மிகவும் பேருதவியாக இருக்கும்.

இவ்வாறு ஊரெழு கணேச வித்தியாசாலையில் நடைபெற்ற மாணவர்களுக்கு இலவசமாகப் பாடப்புத்தகங்கள் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய கோப்பாய் வட்டாரக்கல்வியதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா கூறினுர். பாடசாலை அதிபர் திரு. ச. கதிரவேலு தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

[கு]

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் மஞ்சத்தடி அரசோலை விநாயகர் ஆலயபுனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் இம் மாதம் 28ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

(கு

......

## "கிராமங்கள் வளம்பெற..."

(மாவிட்டபுரம்)

"கிராமங்கள் தோறும் கோயில்கள் இருந்தால் போதாது. அவற்றைப்பேணிப் பாதுகாப்பது அவசியம். கிராமங்களின் உயிர்நாடியாகவிளங்கும் கோயில்களைக் கிராமமக்கள் ஆதரித்து வளர்க்கும் போதுதான் அக்கிராமம்வளம் பெறும்"

இவ்வாறு தெல்லிப்பழை செஞ்சனை ஞானவைரவர் கோவில் பரிபாலன சபைத் தலைவர் திரு. இ. பாலச்சந்திரன் புதிய பரிபாலனசபைத் தெரிவுக்கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் கூறினுர்.

புதிய பரிபாலனசபை உறுப்பினர்களாக தெரிவானேர்விபரம் வருமாறு; தலைவர். திரு. இ. பாலச்சந்திரன், உப தலைவர்: திரு. மு. ஜெகநாதன், பொதுச்செயலாளர்: திரு. சி. மோகனதாஸ், உபசெயலாளர் திரு. க. சிங்காரவேல், பொருளாளர்: திரு. தி.புஷ்பராசா, உபபொருளாளர்: திரு. க. மோகனராசா.

திருவாளர்கள்: இ. சிவன் [illegible]சந்திரன், தெ. மனோகரமூர்த்தி, இ. இராசச்சந்திரன் ஆகியோர் உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (அ)

## நாடும் நடப்பும்

யாழ்ப்பாணத்தில் முக்கிய வீதிகள் விஸ்தரிப்பதற்குத் திட்டம் வகுத்து விரைவில் செயல்படுத்தப்படவும் இருக்கிறது.

பொன்னுக்குத் தான் விலை அதிகரிக்கிறதென்று சொல்ல முடியாது. யாழ்ப்பாணத்தில் இப்பொழுது மண்ணுக்கும் விலை ஏறிக்கொண்டேபோகிறது.

இதிலும் சில புத்திசாலிகள் வீதி விஸ்தரிப்புக்குத் திட்டமிடப்பட்டுள்ளசெய்தி தெரிந்ததும் குறிப்பிட்ட சில வீதியோரங்களிலுள்ள கட்டிடக் காணிகளையும், கட்டிடம் கட்டப்படாமல் கிடக்கும் காணிகளையும் நல்லவிலைக்குத் தட்டிவிடப்பார்க்கிறுர்கள். சிலர் இதில் வெற்றிபெற மற்றும் சிலர் ஏமாந்துள்ள கதைகளும் காதில் அடிபடுகிறது.

ஃ ஃ ஃ

வட இந்திய மாநிலங்களில் ஒன்றான ஹரியானுவில் ஜனதா கட்சிதான் ஆட்சி பீடத்திலிருக்கிறது. பாராளுமன்றத் தேர்தலில் திருமதி இந்திரா காந்தி அமோகவெற்றியீட்டியதைத் தொடர்ந்து ஹரியானு சட்டசபையில் ஆளும் கட்சியான ஜனதா கட்சி அரசின் முதல் அமைச்சரும் முப்பத்தேழு உறுப்பினர்களும் இந்திரா காங்கிரஸில் சேர்ந்துவிட்டனர்.

அதாவது சட்டசபையைக் கலைத்து புதியதேர்தல் நடத்தி ஆட்சி பீடத்துக்கு வருவது நிச்சயமில்லை. இப்படிக் கட்சி மாறிவிட்டால் தேர்தல் செலவுமில்லை, ஆட்சிக்காலம் வரை சட்டசபை உறுப்பினர் பதவிக்கும் ஆட்டமில்லை!

தமிழ்நாட்டில் இப்படி மொத்தமாக கட்சித் தாவல் நடைபெறவில்லையானுலும் போகிற போக்கைப் பார்த்தால் ஒவ்வொருவராக தி. மு. கழகத்துக்குப் போய்ச் சேர்ந்து சட்டசபையைக் கலைக்கவேண்டிய அவசியமில்லாமலே ஆட்சிமாற்றம் ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை!

ஃ ஃ ஃ

சிவராத்திரி நாளன்று தான் கோபாலகிருஷ்ணபாரதி மறைந்தார் அன்றையத்தினத்தில் சுன்னகம் கதிரமலைச் சிவன் கோவில் மண்டபத்தில் விழா எடுப்பதற்கு ஏழிசைச் சூழல் இயக்குநர் நா. ப. பாலச்சந்திரன் அறிவிக்கிறுர். இவ்விழா தொடர்பாக கோபாலகிருஷ்ண பாரதி பாடற்போட்டியொன்றும் நடத்த ஏற்பாடாகி வருகிறதாம்.

--ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### யாழ். உதவி அரசாங்க அதிபரின்

# காரில் திருடிய இளைஞருக்கு நீதிமன்றத்தில் 6 பிரம்படி

(யாழ்ப்பாணம்)

யாழ். உதவிஅரசாங்கஅதிபரின் காரிலிருந்து 500 ரூபா பெறுமதியுள்ள காசோலை, மற்றும் தஸ்தாவேஜுகளைக் கொண்ட தோல்பையை திருடிய இளைஞருக்கு 6 பகிரங்க பிரம்படி வழங்குமாறு யாழ். மேலதிக நீதவான் திரு. கே. எஸ். மகேசன் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இம்மாதம் 22ம் திகதி ஆனைக்கோட்டையைச் சேர்ந்த உதவிஅரசாங்க அதிபர் முத்தையா சுப்பிரமணியத்தின் ஈ. வை. 2661 இலக்கத்தைக் கொண்ட கார் நிறுத்தப்பட்டிருந்த சமயம் அக் காரிலிருந்த 500 ரூபா பெறுமதியான அவரது உடைமைகளைக்கொண்ட தோல்பையை திருடியதாக நீர்வேலியைச் சேர்ந்த 18 வயதான இராமலிங்கம் முருகையா என்ற இளைஞர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

காரிலிருந்து தோற்பையை திருடியசமயம், பொதுமக்கள் இளைஞரைத் துரத்திப்பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்தனர், பொலிசார் நேற்றுக் காலை யாழ் மேலதிகநீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர்செய்தனர்.

எதிரி சார்பில் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகவில்லை. எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது. நீதிமன்றத்தில் வைத்து நீதிமன்ற பொலிஸ் உத்தியோகத்தர் சார்ஜன்ட் எஸ்.ஜே. அன்ரன் மேற்பார்வையில் இளைஞருக்கு நேற்று பிரம்படி வழங்கப்பட்டது. (க)

## இன்று வருடாந்தஉற்சவம்

(பாஷையூர்)

யாழ்ப்பாணம் பாஷையூர் துறைமுகத்திலிருந்து 3 மைல்களுக்கு அப்பாலுள்ள கல்முனை என்னும் இடத்தில் பாஷையூரின் இளைய தலைமுறையினரால் ஆரம்பிக்கப்பட்ட, புனித யூதா ததேயு ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று 25-ந் திகதி வெள்ளிக்கிழமை இரவு ஆராதனையுடன் ஆரம்பமாகி, நாளை சனிக்கிழமை காலை திருநாள் பாடல பூசையும் திருச்சொருபப் பவனியையடுத்து வேவதற்கருணை ஆசீர்வாதமும் இடம்பெறும். சமயச்சடங்குகளை பாஷையூர் பங்குத் தந்தை அருட்திரு. மகேந்திரன் ராஜநாயகம் ஏற்றுள்ளார்.

## புங்குடுதீவு மக்கள் கடை தினமும் திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்ப)

வாரத்தில் ஒருமுறை திறக்கப்படும் விற்பனைத் திணைக்கள புங்குடுதீவு மக்கள் கடை இம்மாத இறுதியிலிருந்து தினமும் திறக்கப்படவுள்ளது!

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்ற மகாநாட்டில் கலந்துகொண்ட வர்த்தக கப்பல்துறைஅமைச்சர் திரு.லலித் அத்துலத்முதலியிடம் புங்குடுதீவிலுள்ள மக்கள் கடையை தினமும் திறக்கவேண்டிய அவசியத்தை எடுத்துக்கூறியதைத் தொடர்ந்து மேற்படி மக்கள் கடை தினமும் திறக்க அமைச்சர் நடவடிக்கை எடுத்துழுளார்.

நெடுந்தீவில் வாழும் மக்கள் தமக்குத் தேவையான பாவனைப் பொருட்களை நிதானவிலையில் பெற்றுக்கொள்ள நெடுந்தீவிலும் ஒரு மக்கள் கடை தேவை என்பதையும் ஊர்காவற்றுறை எம். பி. அமைச்சருக்கு எடுத்துக் கூறியதைத் தொடர்ந்து நெடுந்தீவிலும் ஒரு மக்கள் கடை திறக்கப்படவுள்ளது. (கொ-கு)

......

### ஆழ்கடலுக்குச் சென்ற

## மீனவர் இருவரை 4 நாட்களாகக் காணவில்லை!

[மாவிட்டபுரம்[

நெடுந்தீவிலிருந்து ஆழ் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற மயிலிட்டியைச் சேர்ந்த இருவர் கடந்த 20-ம் திகதி முதல் திரும்பவில்லையாம்.

சீ. தேவானந்தம் அல்லது சின்னக்குட்டி [25 வயது[, செ. யேசுதாஸ் அல்லது சாணைக்குட்டி [26 வயது] என்பவர்களே இவ்வாறு திரும்பாதவர்களாவர்.

மயிலிட்டியைச் சேர்ந்த இவர்கள் நெடுந்தீவில் தங்கியிருந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். கடந்த 20-ம் திகதி படகில் ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச்சென்ற இவர்கள் பின்னர் கரை திரும்பவில்லையென்றும் தேடுதல் நடத்திய சமயம் படகு மட்டும் நீரினுள் அமிழ்ந்திருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

அண்மைக்காலமாக நெடுந்தீவுக் கடல் பகுதியில் இந்திய இழுவைக் கப்பல்களது அட்டகாசம் அதிகரித்து வந்துள்ளதாகவும் இதுவும் அவர்களது செயலாக இருக்கலாமெனவும் சந்தேகிக்கப்படுகிறது.

இது குறித்து நெடுந்தீவுப் பொலிசில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ். அரசாங்க அதிபர் ஆகியோருக்கு புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேடுதல் தொடர்ந் நடைபெற்றுவருகிறது. (அ)

## கனகராயன் குளத்துக்கு மின்சாரம்

(புளியங்குளம்)

''கிராமிய மின்சாரத்திட்டத்தின் கீழ் விரைவில் கனகராயன் குளத்திற்கு மின்சார விநியோகம் நடைபெறவுள்ளது''

இவ்வாறு வவனியா எம்.பி. திரு. தா. சிவசிதம்பரம் கனகராயன்குளம் உபஅஞ்சலக தொலைபேசி இணைப்பு விழாவில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் இப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மூன்று நாட்களில் 2 மைல் தூரமான காட்டினை வெட்டித்துப்பரவாக்கி உதவியுள்ளார்கள். தன்னியக்கத் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்தையும் இவ்விடத்திலேயே அமைக்குமாறு அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்யவுள்ளேன்'' என்றார்.

இவ்விழாவிற்கு வவனியா மாவட்ட தபால் தந்தி அத்தியட்சகர் திரு.சு. மகேஸ்வரன் தலைமைதாங்கினார் நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். டாலசுந்தரம் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். (கு)

......

### ஆலயத்தில் பலியிடுதல்:

## அமைச்சர் இராசதுரைக்கு அறவழிக்குழு பாராட்டு

(யாழ்ப்பாணப்)

ஆலயங்களில் பலியிடுதலை ஒழிக்க வேண்டுமென கடந்த வருடம் தொடக்கம் குரல் எழுப்பிவருகின்ற அறவழிப் போராட்டக்குழு- இக்கொடுமையைச் சட்டமூலம் தடுக்க வழி செய்த பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையைப் பாராட்டியுள்ளது,

1979ம் ஆண்டு அறவழிப் போராட்ட குழுவின் தீவிர முயற்சியின் பலனாக டார் நாட்டிலுள்ள ஆலயங்களான மைகதடிமேற்கு அண்ணமார் கோவில், உரும்பராய் காட்டு வைரவர் கோவில், கொக்குவில் காளிகோவில், மட்டுவில் தெற்கு வைரவர் கோவில் என்பவற்றில் பலியிடுதல் நிறுத்தப்பட்டது.

தனங்கிளப்பு ஒளிவெட்டி வைரவர் கோவிலில் நடைபெற்ற பலியிடுதலைத் தவிர்ப்பதற்காக வேண்டி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது. இப்போது இதனைச் சட்டமூலம் தடுக்க அமைச்சர் திரு. இராசதுரை நடவடிக்கை எடுத்துள்ளார்.

### சமூக ஆய்வரங்கு

சமுதாயத்தில் நிலவுகின்ற சமூகக் கொடுமைகள் பற்றிய ஆய்வரங்கு ஒன்றினை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை அறவழிப் போராட்டக்குழு செய்து வருகிறது.

இவ்வரங்கின்போது சமூகஅநீதிகள், சீதனஒழிப்பு, சாதிஒழிப்பு சமூகமாற்றம், நிர்மாணப்பணிகள், [காந்தீயப்பணிகள் பான்ற விடயங்களையிட்டு ஆய்வுகளும்- விரிவுரைகளும் இடம்பெறும் எனத் தெரியவருகின்றது. இவ் ஆய்வரங்கிற்கு சகல அரசியல் கட்சிகளும், சமூக பொதுஸ்தாபனங்களும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் அழைக்கப்படவுள்ளதாக அறவழிப் போராட்டக்குழு தெரிவித்துள்ளது.

......

## பட்டிருப்பில் 150 வீடுகள்

(மட்டக்களப்பு)

பட்டிருப்பு எம். பி, திரு பூ கணேசலிங்கத்தின் சிபார்சின் பேரில்பட்டிருப்பு தொகுதியில் இவ் வருடம் இரு இடங்களில் சுயவீடமைப்புத்திட்டங்கள் அமைக்கப்படவுள்ளன.

செட்டி பாளையத்தில் 50 வீடுகளும் ... 100 வீடுகளும் அமைக்கப்படும். (கு)

## ஆப்கானில் பிரான்ஸ் நிருபர்கள் துப்பாக்கி முனையில் இம்சை

### டெலிவிஷன் படச்சுருள்களை ரஷ்ய வீரர்கள் சேதப்படுத்தினராம்

காபூல், ஜன. 24

ஆப்கானிஸ்தானில் சோவியத் படை வீரர்கள் 6 பிரான்ஸ் நிருபர்களை இயந்திரத் துப்பாக்கி முனையில் இம்சைப் படுத்தினர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காபூலுக்கு 12 மைல் தூரத்தில் வைத்து இப்பத்திரிகை நிருபர்கள் வழி மறிக்கப்பட்டு இயந்திரத் துப்பாக்கி முனையில் பயமுறுத்தப்பட்டதாகவும் நிருபர்களிடமிருந்த தொலைக்காட்சி படச்சுருள்களைப் பறித்தெடுத்து நாசம் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## "தமிழ்க் கடிதங்களுக்கு தமிழில் பதில் வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் எப்பகுதியிலிருந்தும் தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்கு தமிழில் பதில் எழுதுவதற்கு வசதி செய்யப்பட வேண்டுமென்றும் தமிழ் பேசும் அங்கத்தவர்களின் வசதிக்காக தலைமை அலுவலகத்தில் தமிழ்ப் பிரிவொன்று நிறுவப்பட வேண்டுமென்றும், தமிழ் அங்கத்தவர்களின் விகிதாசாரத்துக்கேற்ப தமிழ் ஊழியர் நியமிக்கப்பட வேண்டும் என்றும் மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணப் பகுதிகளில் பிரதேசவாரியாக சங்கம் இயங்க வேண்டுமென்றும் கோரி யாழ். மாவட்ட பொதுக் கூட்டத்தில் புத்தொளி ந. சிவபாதத்தினுல் முன் மொழியப்பட்ட தீர்மானங்கள் கல்விச் சேவை ஊழியர் கூட்டுறவுச் சிக்கனச் சங்க வருடாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

மேற்படி சங்கத்தின் முப்பத்தோராவது வருடாந்தப் பொதுக்கூட்டம் கொழும்பிலுள்ள தலைமைப் பணிமனையில் திரு. எச். டி. ஏகநாயக்கா தலைமையில் நடைபெற்றது.

அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் படிவெங்கள், விண்ணப்பப் படிவங்கள் அனைத்தும் தமிழில் விநியோகிப்பதற்கு மேற்படி சங்கச் செயலாளரும் கல்வி அமைச்சின் முதலாவது செயலாளருமான திரு. பி. டி. தர்பசேன, திரு. ந. சிவபாதத்திடம் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

திருவாளர்கள் ந. சிவபாதம், நா. நடராசா, க. நவரத்தினம், திருமதி ஸி. அழகராசா ஆகியோர் யாழ் பிரதேசப் பிரதிநிதிகளாக வருடாந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். நீண்டகாலமாக ஜாதிக குரு சங்கத்தின் ஆதிக்கத்திலிருந்த மேற்படி சங்க நிர்வாகம், இத்தடவை ஐ. தே. கட்சி ஆதரவாளர்களின் கைக்கு மாறியது.

......

## தமிழ்தொழிற்சங்க கூட்டணிக் கூட்டம் நாளை நடைபெறுகிறது

(புலோலி)

தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியின் வடபிரதேசக்கிளையின் கூட்டம் நாளை யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது.

வடபிரதேச மொழிவழித் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் இக் கூட்டத்தில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தேசிய மகாநாடுபற்றியும், விடுதலைக் குறைப்புமறியல் போராட்டத்திற்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை பற்றியும், தமிழ்வர்த்தக ஊழியர் சங்கம் அமைப்பது பற்றியும் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

......

## யாழ். தொழில்நுட்ப மாணவர் மன்றம்

(புலோலி)

யாழ். பல்தொழில்நுட்ப நிறுவனத்தில் 1972-ம் ஆண்டு நிறுத்திவைக்கப்பட்ட பொது மாணவர் மன்றத்தை மீண்டும் ஆரம்பித்து வைக்குமாறு தொழில்நுட்ப நிறுவனத் தலைமைப்பீடத்திடம் கோரப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக இப்பல்தொழில் நுட்ப நிறுவனத்திலுள்ள பயிற்சி நெறிகளின் மாணவ மன்றங்கள் கூட்டாகக் கையொப்பமிட்டு இப்பொது மாணவமன்றத்தை அமைக்குமாறு அதிபர் எஸ். டி. ஜெயசிங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன.

1978-ம் ஆண்டு உயர்கல்வி அமைச்சினுல் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகச்சட்ட மசோதாவில் உயர்கல்வி நிறுவனம் ஒவ்வொன்றிலும் பொதுவான மாணவர்மன்றம் இருக்கவேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருக்கின்றபோதிலும் எட்டுவருட காலமாக இத்தொழில் நுட்பநிறுவனத்தில் பொதுவான மாணவமன்றம் அமைக்க அனுமதி மறுக்கப்பட்டுவந்தது.

## அமரர்...

(2-பக்கத் தொடர்ச்சி)

பித்து அதன் தலைவராகப் பத்து ஆண்டுகள் பதவிவகித்தார். ரோட்டரிக்கழகத்தின் தலைவராகவும் பணியாற்றினார்.

அன்னார் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியை உருவாக்குவதில் அமரர் ஜி.ஜி. பொன்னம்பலத்துடன் இணைந்து அயராது உழைத்ததுடன் அதன் ஸ்தாபன உறுப்பினராகவும் செயற்குழு அங்கத்தவராகவும் தொடர்ந்து பலஆண்டுகள் இருந்து கடமையாற்றினார். அத்துடன் அக்கட்சியின் வட்டுக்கோட்டைத்தொகுதி அமைப்பாளராகவும் இருபது ஆண்டுகள் பணியாற்றினார்.

வட்டுக்கோட்டை தொகுதியின் முன்னேற்றத்திற்காகப் பலவழிகளிலும் உழைத்த அன்னாரின் சேவையைப் பாராட்டி அரசாங்கம் 1952-ம் ஆண்டு சமாதான நீதவான் பட்டத்தையும் 1955- ஆண்டு முதலியார் பட்டத்தையும் அவருக்கு வழங்கிக் கௌரவித்தது. அவர் நினைவு என்றும் வாழும்.

தி. வெற்றிவேலுப்பிள்ளை

## இடமாற்றம் ரத்து

(சுன்னாகம்)

1979 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் திடீர் இடமாற்றத்திற்குட்படுத்தப் பட்டசுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர்களின் இடமாற்றம் கல்விக் காரிஷனுல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை யில்

# மகளிர் பாவனையாளர்கல்வித் திட்ட ஆய்வு மகாநாடு

(மாவிட்டபுரம்)

மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித்திட்டம் பற்றிய ஆய்வு மகாநாடொன்று இம் மாதம் 27 ம் திகதி தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சுவீடன் நாட்டு உதவியுடன் ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித்திட்டத்தை செயல்படுத்த கூட்டுறவு அமைச்சு முடிவு செய்து நாடு பூராவிலும் இதற்கென சில ப. நோ. கூ. சங்கங்களைத் தெரிவு செய்துள்ளது. வடக்கில் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்மட்டும் இதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தின் மூலம் சங்க எல்லைக்குள் மகளிரைத் திரட்டி அவர்களிடையே கூட்டுறவு, போஷாக்குணவு, சுகாதாரம், கல்வி போன்ற துறைகளில் அறிவை வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக திருமதி வேலுப்பிள்ளை, செல்வி கந்தையா, செல்வி சின்னத்துரை, செல்வி பா. ஆறுமுகம், செல்வி ஜெயகௌரி ஆகிய 5 பெண்கள் பொல்கொல்லை கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலைக்கு சங்கத்தின் சார்பில் அனுப்பப்பட்டு இதற்கென பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவது தொடர்பாக இம் மாதம் 27 ம் திகதி தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் ஆய்வு மகாநாடொன்று இடம்பெறவுள்ளது. இதில் மேற்படி திட்ட அதிகாரிகள், விரிவுரையாளர்கள் ஆகியோர் பங்குபற்றுவார்கள்.

சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராசா, பொதுமுகாமையாளர் திரு. சி. நவரத்தினம் ஆகியோர் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

# "சகல புத்தகங்களையும்உடன் வழங்க வேண்டும்"

(பண்டத்தரிப்பு)

"இலவசக்கல்வி இந்நாட்டிற்கு கிடைத்த போதிலும் ஏழை மாணவர்களில் பலர் பாடசாலை புத்தகங்களை வாங்கமுடியாது தமது கல்வியைத் தொடரமுடியாது கைவிட்ட சம்பவங்கள் பலபலவுண்டு. அரசாங்கம்பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்குவதினால் இந்த ஏழை மாணவர்கள் பெரிதும் பயனடைவார்கள். மாணவர்களுக்கு சகலபாடப் புத்தகங்களையும் விரைவில் கிடைக்கச் செய்வதற்கு கல்வியமைச்சுநடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிடின் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்படும்" இவ்வாறு பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் நடைபெற்ற இலவச பாடப் புத்தகங்களை மாணவர்களுக்கு கையளிக்கும் விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையில் வட்டுக்கோட்டைத்தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுகுறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. வி. நாகராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் வட்டுக்கோட்டை வட்டாரக்கல்வி அதிகாரி திரு. பி. சண்முகராசாவும் உரையாற்றினார்.

## சந்தேகநபர் கைது

(யாழ்ப்பாணம்)

கொலை சம்பந்தமாக தேடப்பட்ட நபர் ஒருவர் யாழ்ப்பாணப் பொலிசாரால் கோட்டை முனியப்பர் கோவிலில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர், வேறொரு வழக்கு சம்பந்தமாகவும் ஆனைக்கோட்டைப் பொலிசாரால் தேடப்பட்டுவந்தார்.

உடுவில் ஆலடி சின்னத்தம்பி கொலை தொடர்பாக சுன்னாகம் பொலிசாராலும் கோர்ட்டில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கமைய பொலிசில் கையெழுத்துவைக்கத் தவறியதற்காக ஆனைக்கோட்டைப் பொலிசாராலும் தேடப்பட்டுவந்த சின்னையா மனோகரன் அல்லது மாடசாமி என்பவர் யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் வி. தேவசகாயத்தினால் கைது செய்யப்பட்டு சுன்னாகம் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (கொ)

......

## கூட்டணிக் கருத்தரங்கு

(மாவிட்டபுரம்)

பெரியவிளானில் இம்மாதம் 27ம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணிக் கருத்தரங்கொன்று நடைபெறஉள்ளது.

பெரியவிளான் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கிளையால் நடத்தப்படும் இக் கருத்தரங்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் சிறப்புரையாற்றுவார். (ச)

......

## கல்வியதிபதியிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கனிஷ்ட பாடசாலைகளுக்கு அதிபர்களாக 2ம் தர விசேட பதவியுடையவர்களை நியமிக்க வேண்டாம் என்ற இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று யாழ் இந்துக்கல்லூரி கனிஷ்டவித்தியாலய அதிபரை இடமாற்றியமைக்காக வடமாநிலக் கல்வியதிபதி திரு. தி. மாணிக்கவாசகரை சங்கப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் பாராட்டியுள்ளார்.

யாழ் மாவட்டத்துள்ள கனிஷ்ட பாடசாலைகளில் இதேதரத்தில் பதவியிலுள்ள அதிபர்களையும் இடமாற்றம் செய்யுமாறு அவர் வடமாநிலக் கல்வியதிபதியைக் கோரியுள்ளார். (வெ)

# தமிழ் மக்களுக்கு பௌத்த சமயம்

## தர்ம பாடசாலைகள் நிறுவப்படும்

(கொழும்பு)

தமிழ்மக்களுக்கு பௌத்த சமயத்தை கற்பிக்ககலாச்சார இலாகா நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்காக தமிழ்மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் தர்மபாடசாலைகளை நிறுவ கலாச்சார இலாகா நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ் மக்களுக்கு கற்பிப்பதற்காக பௌத்த தர்மபோதனைகளுக்கான சிங்கள நூல்களை பௌத்த இளைஞர் சம்மேளனமும் கலாச்சார இலாகாவும் இலவசமாக மொழிபெயர்க்கும். (இ)

# "இந்தியக் கலைஞர்கள் எமக்கு வழிகாட்டிகள்"

(புலோலி)

"கலை உலகிலே இலங்கை. இந்தியா என்ற வேறுபாடின்றி இந்தியக் கலைஞர்கள் எமது கலைஞர்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டிகளாக இருந்து வருகின்றனர். இயல் இசை நாடகத்துறையில் சிறந்த கலைஞர்களை நாம் வரவேற்றுப்போற்றி அவர்களுக்கு உற்சாகமூட்ட வேண்டியது எமது தலையாய கடமையாகும்."

இவ்வாறு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தில் இன்னிசைக்கச்சேரி நிகழ்த்த வருகைதந்த தென்னிந்தியப் பாடகர் டாக்டர் பாலமுரளி கிருஷ்ண கோஷ்டியினரை வரவேற்று உரையாற்றிய பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் குறிப்பிட்டார் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்

"எமது கலைஞர்களுக்கு இந்தியாவில் பெரும் வரவேற்புக் கிடைத்துவருகின்றது. எமது கலைஞர்களின் வளர்ச்சிக்கு இதுபோன்றநடவடிக்கைகள் உற்சாகமூட்டும் இத்தகைய கலைப்பாலத்தின்மூலம் கலைத்துறையை மேலும் மேம்படையச்செய்யமுடியும்" என்றார். (கு)

# "சிவராத்திரி விடுமுறையை மறுநாளேவழங்கவேண்டும்"

## அமைச்சர்'இராசு'விடம்இந்துமாணவர்கோரிக்கை

(மட்டக்களப்பு)

சிவராத்திரித் தினத்தன்று வழங்கப்படும் விடுமுறையை மறுநாள் வழங்க ஏற்பாடு செய்து தருமாறு பிராந்திய அபிவிருத்தி தமிழ்மொழி அமுலாக்கல் இந்து கலாச்சார அமைச்சர் திரு. செ. இராசதுரையிடம் மட்டுநகர் இந்து மாணவபேரவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சிவராத்திரி தினத்தன்று இரவு நித்திரைவிழித்து நான்கு சாமப் பூசைகளிலும் கலந்துகொள்கின்ற அடியார்கள் மறுநாள் தங்கள் கருமங்களை செய்ய முடியாத நிலையிலுள்ளனர். இதனால் சிவராத்திரிக்காக வழங்கப்படுகின்ற விடுமுறை அன்றைய தினம் வழங்கப்படாமல் மறுநாள் வழங்க வேண்டுமென சைவ அடியார்கள் ஸ்தாபனங்கள் நீண்டகாலமாக வற்புறுத்தி வந்தன. அவ்வேளை 1980 முதல் சிவராத்திரி விடுமுறை மறுநாள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது,

ஆனால் இவ்வருடமும் அவ் விடுமுறை மறுநாள் அமுல் நடத்தப்படவில்லை. இதனால் சைவ அடியார்கள் மிகவும் பாதிப்பு அடைத்துள்ளார்கள் என்று அவர்கள் தமது கோரிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர். (கு)

......

## புதிய வாசிகசாலை

(யாழ்ப்பாணம்)

கோவில் கிராம அபிவிருத்தி சங்கத்தின் முயற்சியால் அக் கிராமத்தில் புதிதாக ஒரு வாசிகசாலை திறக்கப்பட்டுள்ளது.

கிராம அபிவிருத்தி சங்க தலைவர் திரு. இ. இராசலிங்கம் தலைமையில் அகில இலங்கை காந்தி சேவா சங்க பொதுச் செயலாளர் திரு. க. விசுவலிங்கம் வாசிகசாலையை திறந்து வைத்தார்.

இவ் விழாவில் காந்திய கிராம சேவையாளர் திரு. கனகசபாபதியும், இ. தொ. க. கிளைத் தலைவர் திரு. சி. சுப்பையாவும் உரைநிகழ்த்தினார்கள்.

## வயாவிளான் ஞானவைரவர் ச. ச. நி.

# 'ஈழநாடு' ஆதரவில் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி

(பலாலி)

'ஈழநாடு' ஆதரவில் வயாவிளான் ஞானவைரவர் சனசமூக நிலையம் நடாத்தும் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இன்றைய 7 வீரர் ஆட்டத்தில் மயிலிட்டி கண்ணகி வி. கழகத்தை எதிர்த்து குட்டியப்புலம் அம்மன் வி. கழகம் முதலாவது போட்டியிலும், இரண்டாவது போட்டியில் கொக்குவில் சன்ஸ்ரார் வி. கழகத்தை எதிர்த்து காங்கேசன்துறை வி. கழகமும் போட்டியிடும். இப் போட்டிகள் மாலை 3,00 மணிக்கு ஆரம்பமாகும். 4-30 மணிக்கு இடம்பெறும் 11வீரர் போட்டியில் திருநெல்வேலி இந்து இளைஞர் வி. கழகத்தை எதிர்த்துமயிலங்காடு ஸ்ரீமுருகன் வி. கழகம் போட்டியிடும்.

### போட்டி முடிவுகள்

கொக்குவில் சன்ஸ்ரார் வி. கழகத்திற்கும், ஏழாலை பறக்கும் இளைஞர் வி. கழகத்திற்குமிடையே நடைபெற்ற 11வீரர் போட்டியில் சன்ஸ்ரார் கழகம் 4-1 கோல்களால் வெற்றி பெற்றுள்ளது. மத்தியஸ்தராக திரு. சீ. எஸ். அருள்பிரகாசம் கடமையாற்றினார். 7 வீரர் போட்டியில் திருநெல்வேலி இந்து இளைஞர் வி. கழகம், பலாலி உதய கலைவாணி வி. கழகத்தை 3-0 கோல்களால் தோற்கடித்தது. திரு. எம். ஜெகநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (ஈ)

## பீடித்தொழிலாளர் கூலி அதிகரிப்பு

(புலோலி)

"இலங்கை புகையிலைக் கைத்தொழில் கூட்டுத்தாபனம், பீடித் தொழிலாளர்களின் நன்மைகருதி அவர்களது கூலியை அதிகரித்துள்ளது" என்று இலங்கை புகையிலைக் கைத்தொழில் கூட்டுத்தாபனத்தின் இயக்குநர் திரு. கே. கணேசலிங்கம் தெரிவித்தார்.

இதுவரைகாலமும் 1000 பீடி சுற்றும் ஒரு தொழிலாளி ரூ. 7-50 சதத்தையே கூலியாகப் பெற்றுவந்தாரெனவும் இக் கூலி தற்பொழுது 11 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், 'லேபல்' ஒட்டும் தொழிலாளிகளின் கூலியும் ரூ. 1-20 சதத்திலிருந்து ரூ. 1-60 சதமாக உயர்த்தப்பட்டுள்ளதாகவும், இக்கூலி உயர்வினால் யாழ். மாவட்டத்திலுள்ள 3,000 பீடித்தொழிலாளர்கள் நன்மையடைவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

......

## சுகாதாரசேவை அத்தியட்சகர்பிரிவு

(பண்டத்தரிப்பு)

இதுவரை காலமும் யாழ். மாவட்ட சுகாதாரசேவை அத்தியட்சகர் பிரிவின்கீழ் இருந்து வந்த மல்லாவி அரசினர் வைத்தியசாலை, துணுக்காய் அரசினர் மருந்துச்சாலை, துணுக்காய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகிய நிறுவனங்கள் இவ்வருடம் தொடக்கம் வவுனியா சுகாதாரசேவை அத்தியட்சகர் பிரிவுநிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

சுகாதாரத் திணைக்களத்தலைமைப்பீடம் இதுபற்றி சுற்றறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

# யாழ். மாவட்டத்தில் புதிதாக மருந்துக் கலவையாளர் நியமனம்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில்நீண்ட காலத்திற்குப்பின் சமயாசமய மருந்துகலவையாளர்கள் (டிஸ்பென்சர்கள்) நியமனம் பெற உள்ளனர்.

இப்பதவிகளுக்குரிய தகுதியுடையவர்களின் பெயர்ப்பட்டியலை சிபார்சு செய்து தபக்கு விரைவில் அனுப்பிவைக்குமாறு யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமியை யாழ். மாவட்ட சுகாதாரசேவை அத்தியட்சகர் கேட்டுள்ளார். யாழ். மாவட்டத்தில் சமயாசமய மருந்துகலவையாளர்களை நியமித்து மருந்து கலவையாளர்கள் லீவு எடுப்பதிலுள்ள கஷ்டங்களை நீக்குமாறு யாழ். மாவட்ட மருந்து கலவையாளர்கள் சங்கக் கிளை சுகாதார திணைக்களத்தை நீண்டகாலமாக கோரிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

## ஏலத்தில் விற்பனை

(மட்டக்களப்பு)

புயலால் சேதமடைந்த பாடசாலைகட்டிடப் பொருட்கள்பாடசாலை வளவுகளில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க,யோ, முத்துராஜாவின் மேற்பார்வையில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (கு)

......

## சோவியத் தூதுவர் நாடு கடத்தல்

வெலிங்டன், ஜன. 24

நியூஸிலாந்திலுள்ள சோவியத் ஆதரவு கட்சிக்குப் பெருந்தொகைப்பணம் வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் இங்குள்ள தூதுவரை அரசு நாடு கடத்தியுள்ளது.

## இயந்திரம் வழங்கப்பட்டது

(மன்னார்)

மன்னார் திட்டமிடல் அலுவலகப் பாவனைக்காக, ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான 'போட்டோஸ்டற்' பிரதி பண்ணும்இயந்திரமும் ஒலிபெருக்கி சாதனங்களும் திட்டமிடல் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

......

## உதைபந்தாட்டப் போட்டி ஒத்திவைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரிக்குமிடையே மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கில் நடைபெறவிருந்த அகில இலங்கை பாடசாலை ரீதியிலானஉதைபந்தாட்டப் போட்டி,தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டது.

இப்போட்டி பிறிதொரு தினத்தில் நடைபெறும் என்று இப்போட்டி ஏற்பாட்டாளர் தெரிவித்தார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யா தொடர்ந்தும் பயமுறுத்தினுல்: அமெரிக்காஇராணுவ பலத்தைபயன்படுத்தும்

## ஜிம்மி கார்ட்டர் எச்சரிக்கை

வாஷிங்டன், ஜனவரி 24
சோவியத்யூனியனிடம் இருந்து தொடர்ந்தும் பயமுறுத்தல் கிடைக்குமாகுல் அமெரிக்கா தனது இராணுவ பலத்தை பயன்படுத்தத் தவருது என்று அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மிகார்ட்டர் தெரிவித்தார்.

பாரசீகவளைகுடா பிரதேசத்தை எந்த ஒரு நாடாவது தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தாலும் அமெரிக்கா தனது இராணுவபலத்தைப் பயன்படுத்தத் தவறமாட்டாது என்றும் திரு. கார்ட்டர் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் ரஷ்ய தலையீடு குறித்து அமெரிக்க காங்கிரசில் உரைநிகழ்த்துகையிலேயே திரு. ஜிம்மி கார்ட்டர் மேற்கண்டவாறு கூறினுர்.

ஆப்கானிஸ்தானில் சோவியத்யூனியன் மேற்கொண்டு வரும் ஒவ்வொரு நடவடிக்கையும் அமெரிக்காவை பயமுறுத்துவதாகவே அமைகிறது.

உலகின் ஏனைய நாடுகளுடன் நட்புறவுகொள்ளவே அமெரிக்கா விரும்புகிறது.

அமெரிக்காவின் இக் கொள்கைக்கு ஈரான் பணயக்கைதிகள் விவகாரமும் ஆப்கானிஸ்தானில் ரஷ்ய தலையீடும் சவால்களாக அமைந்துவிட்டன. (இ)

## இந்தியக் குடியரசுதின வைபவங்களில் பிரான்ஸ் அதிபர் அதிதி இன்று வருகிருர்

புதுடில்லி, ஜனவரி 24
பிரான்ஸ் அதிபர் திரு. வலரிகிஸ்காட் டெஸ்டாங் இன்று வெள்ளிக்கிழமை இந்திய விஜயம்ஒன்றை மேற்கொள்கிருர்.

இந்தியாவுக்கு விஜயம்செய்யும்முதலாவது பிரான்ஸ் அதிபர் இவரேயாகும். இவருடன் பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர், வெளியுறவு வர்த்தக அமைச்சர் ஆகியோர் உட்பட 22 பேர் அடங்கிய தூதுக்குழு ஒன்றும் இந்தியா வருகிறது.

இம்மாதம் 26ம் திகதி புதுடில்லியில் நடைபெறஇருக்கும் இந்தியாவின் 30வது குடியரசுதினக் கொண்டாட்டங்களில் திரு. டெஸ்டாங் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். [இ]

## சோவியத்தில் இந்திய குடியரசுதின வைபவங்கள்

மாஸ்கோ, ஜனவரி 24
இந்தியாவின் குடியரசு தினக்கொண்டாட்டங்கள் சோவியத்யூனியனில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டுவருகிறது.

குடியரசுதினம் இம்மாதம் 26ம் திகதியாகியபோதிலும் சோவியத்யூனியனில் கொண்டாட்டங்கள் ஏற்கனவே ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

முக்கிய வைபவம் மாஸ்கோ அக்டோபர் புரட்சிமண்டபத்தில் நடைபெற்றது. [இ]

## கட்டுப்பணம் இழந்தனர்

திருவனந்தபுரம்,ஜன 24
கேரள மாநில சட்டசபைத்தேர்தலில் 140தொகுதிகளிலும் போட்டியிட்ட 602 வேட்பாளர்களில் 320 பேர் தமது கட்டுப்பணங்களை இழந்தனர். (இ)

## கொமெய்னிக்கு இருதயநோய்

தெஹ்ரான், ஜனவரி24
ஈரானிய சமயத் தலைவர்அயத்தொல்லா கொமெய்னி திடீரென நோயுற்றதை அடுத்து தெஹ்ரானிலுள்ள ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இருதய நோயினுலேயே அயத்தொல்லா கொமெய்னி பாதிக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கண்காணிப்பில் ஈரானிய ஷா

(பஞமா)
ஈரானிய ஷா பஞமாவில் பாதுகாப்பு உயர்அதிகாரிகளின் தீவிரகண்காணிப்பில் இருந்துவருகிருர் என்று பஞமா ஜனதிபதி திரு. ரோயோ தெரிவித்துள்ளார்.

ஷாவின் பாதுகாப்பைக் கருதியே அவரை பஞமா பாதுகாப்பு அதிகாரிகள் தீவிரமாகக் கண்காணித்துவருகிருர்கள் என்றும் திரு. ரோயோ தெரிவித்தார்.

## அதிமுக அரசை ராஜினமாச் செய்யுமாறு தமிழக இ. காங். கேட்காது
### இளையபெருமாள் கருத்து

சென்னை, ஜனவரி. 24
தமிழ்நாட்டில் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் தலைமையிலான அ. இ. அ. தி. மு. க. அரசை ராஜினமாச்செய்யுமாறு தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சி கேட்காது.

இவ்வாறு தமிழ்நாடு இந்திராகாங்கிரஸ் தலைவர் திரு. இளையபெருமாள் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசை கலைப்பது பற்றியோ ராஜினமாச்செய்யுமாறு கோருவது பற்றியோ முடிவுசெய்யவேண்டியது இந்திராகாங்கிரஸ் தலைமைப் பீடமே என்றும் திரு. இளையபெருமாள் கூறினுர். [இ]

## கேரளாவில்இன்று புதிய அரசு பதவி ஏற்கும்

(திருவனந்தபுரம்)
கேரள மாநிலத்தில் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான இடதுசாரி ஐக்கிய முன்னணி கூட்டரசாங்கம் இன்று வெள்ளிக்கிழமை பதவி ஏற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

......

## பகிஷ்கரிப்புக்கு காங்கிரஸ் அங்கீகாரம்

வாஷிங்டன், ஜனவரி 24
சோவியத்யூனியனில் நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டிகளை அமெரிக்கா பகிஷ்கரிக்கவேண்டுமென்ற அதிபர் திரு. ஜிம்மிகார்ட்டரின் தீர்மானத்திற்கு அமெரிக்க காங்கிரசின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

## லோகசபை இடதுசாரி கூட்டணி

புதுடில்லி,ஜன 24
இந்திய லோகசபையில் கூட்டாக இயங்குவதென நான்கு இடதுசாரிக்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சி போர்வாட்புளக் ஆர். எஸ். பி. ஆகிய கட்சிகளே கூட்டாக இயங்கத் தீர்மானித்துள்ளன.

இக்கட்சிகளின் தலைவர்கள் நேற்றுக்கூடி மேற்கண்டவாறு தீர்மானித்தனர். (இ)

## ஒலிம்பிக் தமாஷ்

மாஸ்கோ, ஜனவரி 24
மாஸ்கோவில் நடைபெற இருக்கும் ஒலிம்பிக்-80 போட்டிக்கு அமெரிக்க விவசாய அமைச்சர் திரு.பொப் பேர்க்லண்ட் வரவிரும்பும் பட்சத்தில் தம்முடன் குழந்தைகளுக்கான பாலூட்டும் போத்தலையும் கொண்டு வரும்படி 'டாஸ்' செய்தி ஸ்தாபனம் ஆலோசனை தெரிவித்துள்ளது.

ரஷ்யாவுக்கான தானிய விநியோகத்தை அமெரிக்கா நிறுத்தியதன் காரணமாக ஒலிம்பிக்போட்டிகள் நடைபெறும்வேளையில், உணவுக்கு தட்டுப்பாடு ஏற்படுமென்று ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளச் செல்பவர்களும் பார்வையாளர்களாகச் செல்பவர்களும் தங்களுக்குத் தேவையான உணவை தாங்களே எடுத்துச்செல்லவேண்டி நேரிடும் என்று அமெரிக்க அமைச்சர் கூறியிருப்பதற்குப் பதிலளிக்கும்வகையிலேயே 'டாஸ்' செய்தி ஸ்தாபனம் மேற்கண்டவாறு தெரிவித்தது. [இ]

......

## இராசுவின் காவலாளர் மயிரிழையில் உயிர் தப்பினுர்

(மட்டக்களப்பு
பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு ,செல்லையா இராசதுரையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் வாகனம்சேதத்துக்குள்ளானது

அண்மையில் மந்திரிசபை கூட்டத்திற்கு கலந்துகொள்ள அமைச்சருடன் மட்டுநகரில் இருந்து கொழும்பு சென்றுகொண்டிருக்கையில் வறக்காப்பொலையில் வைத்து லொறி ஒன்றில் உராய்வு ஏற்பட்டமையால்பின் கதவு பலத்த சேதமடைந்துள்ளது. அக்காரில் பிரயாணம் செய்த பாதுகாவலர்கள் மயிரிழையில் உயிர் தப்பினர். (கு)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
**தனிப்பிறவி**
(புதிய பிரதி)

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
ஜெமினி-சாவித்திரி
**கடன் வாங்கி கல்யாணம்**

3-வது ஜனசமுத்திர வாரம்
**REGAL** (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P.m.
JAMES COBURN. YORK SUSANNAH
**SKY RIDERS**
குறிப்பு :- காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பமாவதால் ரிக்கற்றுக்கு முந்துங்கள்.

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ராஜன்-புஷ்பலதா நடித்த
**புகுந்த வீடு** (புத்தம்புதிய பிரதி)

**லிடோ** (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 2-15, 4-15, 7-00, & 9-30
போன்: 7693
**Zoltan Hound of Dracula**

**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சாவித்திரி
**கற்புக்கரசி**

**சாந்தி** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
போன்: 7642
26-1-80-ல் 100-வது வெற்றித்தின விழா !
கடைசி வாரம் **டாக்ஸி டிரைவர்** - கலர்
இத்துடன் "அறிஞர் அண்ணாவின் இறுதியாத்திரைப் பவனி" -நேர்முக வர்ணனை கலைஞர் மு. கருணாநிதி.
Next : THE TAKING OF PELHAM ONE, TWO, THREE.

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
கடைசி வாரம்
தினசரி காலை 10-30
பி. ப. 2-30, 6-15, 9-45.
சிவாஜி,
சுஜாதா,
விஜயகுமார்
**தீபம்**
Coming Soon - AIR PORT FRAMED

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
தினசரி: 10-30, பி. ப. 2-30, 6-30, 9-30
ஏ. வி. எம். ராஜன், ஜெயசித்திரா,
ஜெய்கணேஷ், அசோகன்
**தாயில்லா குழந்தை**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, விஜயா, மனோரமா,
தேங்காய் சீனிவாசன்
நடிக்கும்
6-வது ஜனத்திரள் வாரம்
ஜெனரல் **சக்கரவர்த்தி**
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்

**ராணி** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
காட்சிக்குக் காட்சி மங்கையர் கூட்டம் மடை திறந்த வெள்ளம் போல் அலை மோதும் காரணம் யாதோ ?
மங்கையர் திலகம் சாவித்திரியுடன்
நாகேஸ்வரராவ்
சேர்ந்து நடித்த
**தேவதாஸ்** தான் காரணம்
காட்சிகள் குறித்த நேரத்திற்கு முன்பே தொடங்குவதால் தங்கள் ரிக்கட்டுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்.

# இன்றைய பலன்

தை மாதம் 11-ம் திகதி
வெள்ளிக்கிழமை
(25-1-1980)

மேடம்: ஆசை வார்த்தைகளால் அவதிப்படுவீர்கள், இதயபாரம் வேதனைப்படுத்தும், அதிக முயற்சி எடுப்பினும் அற்ப லாபமே கிடைக்கும்.

இடபம்: புண்ணிய விருப்புக்கிடமுண்டு, உடல்நிலையில் அபிவிருத்தி தென்படும், குடும்ப சுகமுமுண்டு, குறிக்கோள் வெற்றியுண்டு.

மிதுனம்: சிந்தனைக் கணைகள் தாக்கும், வேண்டாத தலையீடு பொறுமையைச் சோதிக்கலாம், சிறிய விஷபயமுண்டு.

கடகம்: சொகுசான வாழ்க்கையையே விரும்புவீர்கள், விருந்துபசாரங்களில் ஈடுபடுவீர்கள், அன்னைவழி ஆதரவும் உண்டு.

சிங்கம்: புதிய முதலீடுகளுக்கு சிறப்பான தினம், பத்திரவழிப் பெருமையும் உண்டு, முன்னேற்ற தினம்.

கன்னி: வட்டமிடும் கழுகுப் பார்வை உங்களை மிரட்டப் பார்க்கும், தொழில் துறையிலும் கஷ்டநிலைமைகள் உருவாகலாம், பொருளும் பறிபோவதற்கு இடமுண்டு.

துலாம்: புதிய தொடர்புகளுக்கிடமுண்டு, ஒளிமயமான சூழ்நிலை உருவாகும், களஸ்திரப் புகழுமுண்டு, கவர்ச்சியான தினம்.

விருச்சிகம்: விபரீதங்களும் இடம் பெறலாம், அக்கினியாயுத பீடையுமுண்டாம், தொழிலிலும் பொறுமையைப் பேணவும்.

தனுசு: தனவரவுக்கிடமுண்டு, பொதுத் துறையில் புகழும் பரவும், கடமையும் சிறக்கும், கண்ணியமான தினம்.

மகரம்: தொழிலிலும் நன் மாற்றங்கள் உருவாகும், இடைக்காலப் பிரிவும் உண்டு, ஓவியர்கள் வாழ்க்கையும் ஒளிமயமாகும், சுபதினம்.

கும்பம்: இலாபகரமான தினம், பெருளாதார நிலை சீரடையும், எதிர்பாராத வரவுகளும் உண்டு, குடும்பத்திலும் மகிழ்ச்சியுண்டு.

மீனம்: அவசரக் கோலத்தைத் தவிர்த்து நடக்கவும், கடமையிலும் தடைகள் தோன்றும், உடற் சுகாதாரம் அவசியம் விரும்பத்தக்கது.

சோதிடக் கலாநிதி
**திருமலை**
**க.வே பூப்பிள்ளை**

## கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

அளவை இளைஞர் வட்டத்தின் ஆதரவில் இம்மாதம் 27ந் திகதி மாலை அளவெட்டி தெற்கு சமாஜ மண்டபத்தில் நடைபெறவிருக்கும் விசேட கருத்தரங்கில் மானிப்பாய் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம் "மத்திய கிழக்கு நாடுகளில் வல்லரசு நாடுகளின் ஆதிக்கப்போட்டியும், அதன் பாதிப்புக்களும்" என்ற விடயம் பற்றி உரையாற்றுவார்.

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
**முத்துச்சிப்பி**

சுவீடன் உதவியுடன்

# விழிப்புலனற்றோருக்கான செயற்திட்டம்

## ஆலோசனைக்கூட்டம் நாளை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

சுவீடன் நாட்டுவிழிப்புலனற்றோர் சம்மேளனத்தின் நிதி உதவியுடன், இலங்கை விழிப்புலனற்றோர் சம்மேளனம், விழிப்புலனற்றோருக்கான நல்வாழ்வு செயல்திட்டம் ஒன்றினை ஆரம்பிக்கவிருக்கிறது.

இத்திட்டத்தினை செயல்படுத்தும் முகமாக ஆரம்பத்தில் கொழும்பு, கண்டி, மாத்தறை, யாழ்ப்பாணம் ஆகிய நான்கு மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மாவட்டங்கள் தோறும் செயல்திட்டம் வெற்றியளிக்கும் வகையில் நான்கு மாவட்டத் தலைவர்கள்நியமிக்கப்பட்டுள்ளனர். யாழ். மாவட்டத் தலைவராக தெல்லிப்பழை உரும்பசிட்டியைச் சேர்ந்த சட்டத்தரணியும், யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவருமான க. வே. மகாதேவன் நியமிக்கப்பட்டுள்ளார். இச்செயற்திட்டத்தின் மூலம்விழிப்புலனற்ற முதியோர் கல்வி வசதி- பொருளாதாரமுன்னேற்றம், சுயதொழிற்பயிற்சி, சுயதொழில் ஆரம்பிப்பதற்கான நிதிஉதவி ஆகியனஅளிக்கப்படும். இத்திட்டம் விழிப்புலனற்றோருக்கு சுயமரியாதையையும் தனித்துவத்தையும் ஸ்திரமான பொருளாதாரநிலைமையையும் ஏற்படுத்திக் கொடுக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்திலும் அதனை அடுத்துள்ளமாவட்டங்களிலுமுள்ள விழிப்புலனற்றோர்;மாவட்டத்தலைவர் திரு. மகாதேவனுடன் தொடர்பு கொண்டு இச் செயற்திட்டத்தின்பயனைப்பெறுமாறுகோரப்படுகின்றனர்.

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம், நாளைக்காலை கைதடி நவீல்ட் பாடசாலையில் யாழ். மாவட்டத்தலைவரை சந்தித்து ஆலோசனை நடாத்தவிருக்கிறது. இந்த ஆலோசனைக்கூட்டத்தில் விழிப்புலனற்றோர் கலந்துகொண்டுதங்கள்ஆலோசனைகளையும், தேவைகளையும் தெரிவிப்பார்கள்.

**விற்பனையைப் பெருக்க பஸ்களில் விளம்பரம் செய்யுங்கள்**

பஸ்களில் விளம்பரம் செய்வது சிக்கனமானதும் அநேகரின் கண்களைக் கவரக் கூடியதுமாகும். எமது பஸ்கள் நாளாந்தம் 2,00000 பிரயாணிகளை ஏற்றி இறக்குவதுடன் 75,000 கிலோ மீற்றர்களை செயலாற்றியும் வருகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டை விட நாங்கள் மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலும் பஸ் சேவையை நடாத்துகின்றோம்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்தரிப்பிடங்கள், பஸ் நிலையங்கள், பஸ்கள் ஆகியவற்றின் மூலம் விளம்பரம் செய்வதற்கு போதிய வாய்ப்பை அளிக்கிறது. விளம்பரங்களைச் சேகரித்துத் தருவதற்கு தரகர்களும் தேவைப்படுகிறார்கள். இவர்களுக்குத் தகுந்த தரகுப்பணம் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு பின்வரும் உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளவும். பொதுசன உறவு உத்தியோகத்தர், வடபிராந்திய போக்குவரத்துச் சபை, 165, 4-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 7851.

தலைவர்,
வடபிராந்திய போக்குவரத்துச்சபை

165, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

4765

**விற்பனையாகின்றன**
**பாட நூல்கள்**
ஒன்றிணைந்த பாடத் திட்டத்திற்கான

குழந்தைகளுக்கான **சுற்றுடற் கல்வி**

| 2-ம் வகுப்பு | 3-ம் வகுப்பு | 4-ம் வகுப்பு | 5-ம் வகுப்பு |
|---|---|---|---|
| 6-00 | 6-50 | 7-00 | 7-50 |

குழந்தைகளுக்கான **சுகாதாரக் கல்வி**

| 2-ம் வகுப்பு | 3-ம் வகுப்பு | 4-ம் வகுப்பு | 5-ம் வகுப்பு |
|---|---|---|---|
| 2-50 | 4-00 | 4-50 | 5-00 |

செயல் மூலம் உணர்தல் **பாலர் கணிதம்**

| பாலர் வகுப்பு | முதலாம் வகுப்பு |
|---|---|
| 5-00 | 6-00 |

5-ம் வகுப்பு புலமைப் பரிசிற் பரீட்சைக்கான

| | | |
|---|---|---|
| பொது உளச்சார்பு பயிற்சிகள் | - | 8-50 |
| தமிழ் மொழிப் பயிற்சிகள் | - | 5-50 |
| கணிதப் பயிற்சிகள் | - | 5-50 |

ஆசிரியர்களுக்கு கழிவு கொடுக்கப்படும்.
கிடைக்குமிடம்:
**ஞானசுரபி புத்தகக் கம்பனி**
யாழ்ப்பாணம். 4784

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிவந்துவிட்டன

வினாவிடைகள் A/L1980 ஏப்பிரல்
பொருளாதாரம்
T. லோகநாதன் B. A.
இந்து நாகரிகம்
M. S. ஐயர் M. A.
அளவையியல்
R. நவரட்ணம் B. A.
கிடைக்குமிடங்கள்:
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
பூபாலசிங்கம் புத்தகசாலை
சாரதா ஸ்டோர்ஸ் & புத்தகசாலை
லோகநாதன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
V. P. P. மூலமும்
பெற்றுக்கொள்ளலாம்.



# ஈழநாடு The EELANAADU

50 சதம்


மட்டு - கொழும்பு

## புகையிரதம் தடம்புரண்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து நேற்று முன்தினமிரவு கொழும்பு புறப்பட்ட தபால் ரயில் ஹொரகொல்லகமவில் வைத்துத் தண்டவாளத்தை விட்டு விலகியது, சாரதியின் சாதுரியத்தினால் பிரயாணிகள் எதுவித ஆபத்துமின்றி உயிர் தப்பினர்

இதன் காரணமாக மட்டக்களப்பு-கொழும்பு புகையிரத சேவைகள் ஸ்தம்பிதம்பித்தன தற்சுபாது புகையிரத சேவை வழமைபோல்நடைபெறுகிறது


Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING

யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும்
சிறந்த முறையில்
திருத்திக்கொள்ள...




டில்கா வாச்வேக்ஸ்
. பஸ் நிலைய எதிர் மேல்மாடி .
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## புலமைப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னிட்டுத் தேசிய ஹிஜ்ரிவிழாக் குழு, அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத்திய கட்டுரைப் போட்டியில் செல்வி ஜன்ஸி அப்துல் கபூர் வெற்றிபெற்றுப் புலமைப்பரிசில் பெறும் தகுதியைப் பெற்றுள்ளார்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவியான ஜன்ஸி அப்துல் கபூர் (ரஸ்மா) தாம் பிறந்த மண்ணுக்குப் பெருமை கொணர்ந்துள்ளார். புலமைப் பரிசில் பெறத் தகுதிபெற்ற மாணவர்கள் தற்போது படிக்கும் வகுப்பிலிருந்து பல்கலைக் கழகப் படிப்பு முடியும்வரை புலமைப் பரிசில் வழங்கப்படுவர்,

எதிர்வரும் 28ந் திகதி திங்கட்கிழமை, ஹிஜ்ரி இறுதி நாள் விழாவின்போது ஜனாதிபதி ஜே. ஆர், ஜயவர்த்தன வெற்றி பெற்றவர்களுக்குரிய பரிசுகளை வழங்குவார்.

## தமிழ்க் காங்கிரஸ் பொதுக்கூட்டம்

(கொழும்பு)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் கொழும்புக்கிளையின் ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் கொழும்பு இல்லத்தில் நடைபெறவுள்ளது. (கு)

## "ஈழநாடு" தேர்தல் போட்டி

இந்திய பாராளுமன்ற இடைக்காலத் தேர்தலையொட்டி "ஈழநாடு" பத்திரிகை நடத்திய போட்டி சம்பந்தமாக ஒரு மகிழ்ச்சிச் செய்தி-

தேர்தல்போட்டி சம்பந்தமான நடுவர் குழுவினர் நேற்று மாலை "ஈழநாடு" அலுவலகத்தில் கூடி, போட்டிக்கூப்பன்கள் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியின் 'சீலை' உடைத்து நீண்ட நேரமாகப்பரிசீலனை செய்தனர்.

மலைபோல் குவிந்துவிட்ட போட்டிக் கூப்பன்களை, தனித்தனியாகப் பிரித்து, அவதானமாகப் பரிசிலனை செய்வதில்... நடுவர் குழுவினருக்கே பெரும் சிரமம் ஏற்பட்டுவிட்டது! அத்தனை கூப்பன்கள்!

இப்போட்டி சம்பந்தமான விபரங்கள் சில தினங்களில் "ஈழநாடு', இதழில் வெளியிடப்படும்.

## சிவன்கோவில் பிரதமகுரு காலமானார்

(திருநெல்வேலி)

திருநெல்வேலி சிவன் கோவில் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ ஆனந்த நடராசக் குருக்கள் தமது 90 வது வயதில் காலமானார். மரணச் சடங்குகள் கொக்குவில் மயானத்தில் நடைபெற்றன.


## மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்

உங்களை
திருச்சிராப்பள்ளி,
மதுரை, பம்பாய்,
கோலாலம்பூர்,
சிங்கப்பூர், பரிஸ்,
லண்டன், துபாய்,
சவூதி அரேபியா,
கனடா
ஆகிய நாடுகளுக்கு
அழைத்துச் செல்ல

மற்றும்
பாஸ்போட்,
அமெரிக்கன்
டிறவலர்ஸ் செக்
உலகின் எப்பகுதிக்கும்
விமான டிக்கட்,
சுற்றுலாக்கள்
ஆகிய உங்கள்
தேவைகளை

கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில்
ஒழுங்குசெய்துகொள்ள
இன்றே தொடர்புகொள்ளுங்கள்

மக்கினென் டிரவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்.,

தபால்பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154

பணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது


## தமிழ்நாட்டில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படும் என்று எம். ஜீ. ஆர். கூறினர்.

### வழக்குகள்

அரசியல் கட்சிகளுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டு செப்டம்பர் மாதம் 15ந் திகதிக்குப் பின் பைசலாகாமலிருக்கும் வழக்குகள் யாவும் திரும்பப் பெறப்படுமென்று முதல்வர் சொன்னர்.

ஆனல் கொலைசெய்தது, கொலைசெய்ய எத்தனித்தது போன்ற வழக்குகள் வாபஸ் பெறப்படமாட்டாதென்றும் முதல்வர் கூறினர்.

## மரண அறிவித்தல்

### முத்தையா அருளம்பலம்

அரியாலையைச் சேர்ந்த முத்தையா அருளம்பலம் காலமானர். இவர் காலம்சென்ற முத்தையாவின் மகனும் யோகம்மாவின் கணவரும், சண்முகலிங்கம் (கொழும்பு குழந்தைகள் ஆஸ்பத்திரி) கமலாதேவி, மகேந்திராதேவி, தருமகுலதேவி, (புளியம்பொக்கனை விவசாயக்கந்தோர்),ஸ்ரீராசலிங்கம்ஆகியோரின் தந்தையாரும், குணரத்தினம் (மட்டக்களப்பு கல்லடி AGRARIAN சேவை) சண்முகநாதன் (மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) இராசலெட்சுமி ஆகியோரின் மாமனாரும் ஆவார். பூதவுடல் ஈமைக் கிரிகைகளுக்காக 26ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு 22/1, கனகரட்ணம் அரியாலை வீதியிலிருந்து சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

உறவினர்கள்

அரியாலை 4788


### விற்பனைக்கு

அடைவு கடைக்குப் பாவிக்கக்கூடிய இரும்புக்கம்பிக்கூடு ஒன்று விற்பனைக்குண்டு. 151, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்புகொள்ளவும். 4790





சொற்ப யமஹா மோட்டார்

சைக்கிள்கள் (புத்தம் புதிய) வருகின்றன

YB 100 - ரூபா 11,050-00 ஹெல்மட்
DX 100 - ரூபா 11,725-00 இனும்

ஆகையால் ஏமாற்றத்தை தவிர்ப்பதற்கு

முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளுங்கள்
பினன்ஸ் வசதிகள் செய்துகொடுக்கப்படும்

YAMAHA It's a way of life.

த பினன்ஸ் கம்பனி லிமிட்.,
191, மின்சாரநிலைய வீதி, - யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7680


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜனவரி மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No. GE/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org